திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, இந்தத் திட்டம் 1978—லே 21 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. தற்போது எங்கே போய் நிற்கும் என்று சொல்ல முடியாது. ஏனென்றால் நாளுக்கு நாள் விலைவாசி ஏறிக்கொண்டே இருக்கிறது. வேலை காலாகாலத்தில் முடியாத நிலை ஏற்பட்டால் பல கோடி ரூபாய் அதிகமாகச் செலவு செய்யப்பட்டு பணம் விரையம் ஏற்படும். ஆகையால் இந்த வேலையை சீக்கிரமாக் முடிப்பதற்கு அரசாங்கம் முன்வருமா? அதற்கு என்ன ஏற்பாடு என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கூறுவது உண்மை. 1974 ஆம் ஆண்டில் இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும்போது 8.35 கோடி ரூபாய் என்று திட்டமிடப் பட்டது. ஆனால், திட்டம் எடுக்கப்பட்டதே தவிர நிதி ஒதுக்கப் படவில்லை. அதனால் அப்படியே இந்தத் திட்டம் கிடந்தது. இப்போது நாங்கள் வந்த பிறகு அந்தத் திட்டத்தைச் செயல் படுத்த அதற்கான நிதி ஒதுக்கீடு செய்து, விரைவில் முடிக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்து வருகிறோம். 1983 ஜூன் மாதத்திற்குள் இது முடிந்துவிடும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : துணைத் தலைவரவர்களே, இந்த சேர்வலாறு அணைத் திட்டத்தையும் காரையாறு அணைத் திட்டத்தையும் இணைக்கும் வகையில் ஒரு டன்னல் திட்டம் உருவாக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அந்த டன்னல் திட்டத்தை துரிதமாக எடுத்து செயல்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ? அதன் மூலம் என்னென்ன பலன் ஏற்படும் என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : துணைத் தலைவர் அவர்களே, சேர்வலாறு திட்டம் பற்றித்தான் என்னிடம் தகவல் இருக்கிறது. வேறு ஒரு திட்டத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அந்த விவரம் தற்போது என்னிடம் இல்லை.

சைக்கிள் டயர், டியூப் தயாரிக்கும் தொழிலுக்கு அரசு உதவி.

*வினா எண் 462—திரு. என். எஸ். வி. சித்தன்—மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் சிறு தொழில்களாக Small Sc le indust ies இயங்கும் சைக்கிள் டயர், சைக்கிள் டியூப் தயாரிக்கும் தொழிற் சாலைகள் கடந்த சில ஆண்டுகளாகவே நட்டத்தில் இயங்கு கின்றனவா ?

1982 மார்ச் 11]

(ஆ) ஆம் எனில் அரசு அவைகளுக்கு என்ன உதவிகள் செய்ய உத்தேசித்துள்ளது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :

(அ) தமிழகத்தில் ஏழு சிறு தொழில் பிரிவிலுள்ள சைக்கிள் டயர் மற்றும் டியூப் தயாரிக்கும் தொழிற்சாலைகள் எல்லாம் தற்போது நட்டத்தில் இயங்குவதாக தொழில் வணிக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

(ஆ) இத்தகைய தனிப்பட்ட சிறு தொழில் நிறுவனங்கள் இவ்வரசினையோ அல்லது சிறு தொழில் நலவாழ்வு புனரமைப்புக் குழுவினையோ தங்களுடைய குறைகளைப் பற்றி அணுகினால், அக் குறைகளை பரிசீலித்து தன்னாலான உதவிகளைச் செய்து அவைகளை நல்ல முறையில் இயங்க ஆவன செய்ய இயலும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : துணைத் தலைவரவர்களே, இந்த சிறு தொழில் நிறுவனங்கள் கார், டிரக் போன்றவைகளை உற்பத்திச் செய்யும் டன்லப் போன்ற பெரிய தொழில் நிறுவனங்களும் சைக்கிள் டயர், டியூப்களை உற்பத்தி செய்து மார்க்கெட்டுக்கு அனுப்புவதால் அந்தப் பெரிய தொழில் நிறுவனங்களோடு போட்டியிட முடியாமல் நசிந்துப் போகின்றன. அதனால் இந்த சிறு தொழில் நிறுவனங்கள் மூடப்படும் நிலையில் இருக்கின்றன. ஆகவே, அரசாங்கம் இந்த மாதிரியான நிறுவனங்களை ''சிக்'' யூனிட்ஸ் என்று எடுத்துக் கொண்டு அவைகளுக்கு நிதி உதவி அளித்து, சிறப்பு சலுகைகள் அளித்து எதிர்காலத்திலே நல்ல முறையில் செயல்படுத்த நடவடிக்கை எடுக்குமா ? அரசாங்கத்திடம் இது பற்றி சைக்கிள் டயர் தயாரிப்போர் சங்கம் ஏற்கனவே முறையிட்டிருக்கின்றது. அந்த முறையீட்டை அரசு பரிசிலனை செய்து, உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாகவும் இது சம்பந்தமாக மனு கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இந்தத் தொழில்களுக்கு புது உத்வேகம் கொடுக்கின்ற வகையில் தமிழக அரசு முயற்சிகளை எடுத்திருக்கிறது.

ஆறுமுனைகளில் இதற்கு ஒரு பரிகாரத்தைத் தேடினால் இது முழுமையான தொழிலாக இருக்கும் என்ற வசையிலே சுங்க வரியினின்று சிறு தொழில்களுக்கு விலக்களித்தல், உள்நாட்டு வணிகத்தை சிறு தொழில்கள் பிரிவுக்கு மட்டுமே ஒதுக்கீடு செய்வது, வெளிநாட்டு வியாபாரத்திற்காக பெரிய தொழிற்சாலைகளின் உற்பத்தியை ஏற்றுமதிக்காக ஒதுக்கீடு செய்வது இயற்கை ரப்பரின் மீதான ரப்பர் மேல் வரி, செஸ் வசூலிப்பதை சிறு தொழில் பிரிவுக்கு நீக்குவது, ரப்பர் சுத்திகரிப்பு, ரப்பர்

மூலம் டயர், ட்யூப் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்கள் மற்றும் இரசாயனப் பொருட்களின் மீதான சுங்க வரியைக் குறைத்து இவ்வத்தியாவசியமான மூலப் பொருட்களைக் குறைந்த விலையில் சிறு தொழில்களுக்கு அளிக்க வழி வகை செய்தல், இப்போது உள்ள விற்பனை வரியில் ஒரு கணிசமான அளவுக்கு நீக்குதல், சிறு தொழில் பிரிவுகளுக்குக் கடன் வசதிகளைத் தாராளமாக நீட்டிக் கொடுத்தல் ஆகிய 6 வகைகளில் முயன்றால் ஓரளவுக்குக் இது சிறப்பாக இருக்கும் என்று கருதி அரசு அதன் மீது ஆலோசனை செய்து வருகிறது. மத்திய அரசு செய்ய வேண்டிய பணிகளுக்காகவும் அங்கே முனைந்து தகவலைச் சொல்லி வருகிறது.

திரு. என்., எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நலிந்த தொழிற்சாலைகளினுடைய முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு அரசாங்கம் செய்கின்ற முயற்சிகளோடு — அரசாங்கம் பெரிய நடுத்தர தொழில்களுக்கு அவைகள் ஏற்கனவே செலுத்தியுள்ள வணிக வரியிலிருந்து வட்டியில்லா கடன் கொடுத்து வருகிறார்கள். அதேபோன்று சிறு தொழில்களுக்கும் செலுத்திய வரியிலிருந்து வட்டியில்லாக் கடன் 1978-ஆம் ஆண்டுக்கு பின்னாலே ஆரம்பிக்கப்பட்ட தொழில்களுக்குக் கொடுத்து வருகிறார்கள் —. இந்தச் சலுகைகளை 1972-லிருந்து ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சாலைகளுக்கும் அளித்தால் அதுவே அந்தத் தொழிற்சாலைகளுக்குப் பெரிய உதவிகரமாக இருக்கும். ஆகவே இவ்வரசு தன்னுடைய அதிகாரத்தை வைத்துக் கொண்டு இதைச் செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகள் தக்க முறையிலே கலந்து ஆலோசனை செய்யப்படும்.

திரு. கு. ரமணி : துணைத் தலைவர் அவர்களே, சைக்கிள் ட்யூப் டையர் என்பது சாதாரண மக்களுக்கு மிக மிகத் தேவையான ஒரு அத்தியாவசியப் பொருளாக இருக்கின்றது. பொதுவாக எல்லாவிதமான தொழில்களுக்கும் போகக் கூடிய இலட்சக்கணக்கான தொழிலாளர்களுக்கும் மற்றவர்களுக்கும் பயன்படுவது சைக்கிள். ஆகவே இதற்கான ட்யூப், டையர் போன்றவற்றின் விலை உயர்ந்துவிட்ட காரணத்தால் அவர்கள் தற்போது வாங்க முடியாத நெருக்கடியில் இருக்கிறார்கள். சின்னச் சின்ன தொழில்கள் ஆரம்பிக்கின்றபோதும், நலிந்து போகின்ற தொழில்களுக்கும் அரசாங்கம் உதவி செய்கிறது. ஆனால் இப்படிப்பட்ட சிறு தொழில்களை அதாவது டயர், ட்யூப், போன்றவை தயாரிக்கின்ற தொழிற்சாலைகளை அரசாங்கமே ஏன் ஆரம்பித்து நடத்தக்கூடாது ? அதற்கு ஏதாவது முயற்சி செய்வார்களா ? அப்படி ஏற்படுத்தினால் விலையையும் கூடக் குறைக்க முடியும் அல்லவா ?

1982 மார்ச் 11]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரமணி அவர்கள் சொன்ன அந்த ஆலோசனையை ஒட்டியே கன்னியாக்குமரி மாவட்டத்தில் கிடைக்கின்ற ரப்பரை வைத்துக் கொண்டு அரசு கூட்டுறவுச் சங்கங்களின் சார்பாக ஒரு தொழிற்சாலை உருவாக்க வேண்டும் என்ற கருத்தை அரசு தீவிரமாகப் பரிசீலனை செய்து வருகிறது.

திரு. க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் விற்பனை ஆகாமல் தேங்குவதால் பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களில் செய்வதுபோல் தமிழக அரசும் அவற்றை விற்பனை செய்வதற்குரிய நடவடிக்கையினை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவர் அவர்களே, சிட்கோ நிறுவனத்தின் மூலமாக மார்க்கெட்டிங் டிவிஷன் வைத்து சிறு தொழில் முனைவர்களுக்கு உதவி செய்து வருகிறோம். ஆகவே தேவைப்பட்டவர்கள் சிட்கோவை நாடலாம்.

திரு. எல். இளையபெருமாள் : துணைத் தலைவரவர்களே, இதுபோன்ற சிக் யூனிட்டுகளுக்கு ரப்பர் போன்ற மூலப் பொருட்களை மானிய விலையில், குறைந்த விலையில் கொடுத்து அவர்களை ஊக்குவிப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : துணைத் தலைவரவர்களே, நான் மூலக் கேள்விக்குப் பதில் சொல்கின்ற நேரத்திலே 6 வகையான முயற்சிகளைச் செய்துக் கொண்டிருப்பதாகச் சொன்னேன். அது நடந்தாலே பொதுமான அளவுக்கு நன்மைகள் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பி. எஸ். துரைசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே காவிரி ரப்பர் நிறுவனம் மின்சாரம் இல்லாத காரணத்தால் மூடி வைக்கப் பட்டுள்ளது. அது மிகவும் நஷ்டத்தில் ஓடிக் கொண்டிருந்தது. ஆகவே அதற்கு வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; துணைத் தலைவரவர்களே, காவிரி ரப்பர் நிறுவனம் அரசை உரிய முறையிலே நாடினால் தக்க பரிகாரம் காணப்படும்.